# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 42/2025 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | வெங்கடேசன் |
| **Father Name** | ~ | குப்புசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.**

**04.02.2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் பாலசுப்பிரமணியன் என்பவரை தெரியும். குரோம்பேட்டையில் அவர் வசித்து வந்தார். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி முறையிடப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 14.07.2024 ஆம் தேதி காலை சுமார் 3 மணியளவில் நானும் ஜோசப்பும் டீக்கடைக்கு வந்து கடைக்காரரிடம் டீ கேட்டபோது அவர் டீ போட்டு

கொண்டிருந்தபோது அதே பகுதியை சேர்ந்த ரமேஷ், கிஷோரும் டீ கேட்டதாகவும் அவர்களுக்கு சேர்த்து கடைக்காரர் டீ போட்டு கொண்டிருந்தபோது ஆஜரில் உள்ள ரமேஷ், கிஷோர் என்ற இரண்டு எதிரிகளும், புகார்தாரர் பாலசுப்பிரமணியத்தை அசிங்கமாக பேசி கையில் இருந்த கத்தியை காட்டி செல்ல விடாமல் கல்லாவில் இருந்த ரூ. 400 பணத்தை எடுத்து சென்றதாகவும், மேலும் புகார்தாரரை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாக கூறிவிட்டு ஆனால் தற்போது எதிரிகளுடன் ஒரே பகுதியில் வசித்து வருவதாலும் எதிரிகளை காப்பாற்ற வேண்டி நடந்த விவரங்களை பற்றி தெரியாது என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 42/2025 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ஜோசப் |
| **Father Name** | ~ | ரங்கநாதன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 04.02.2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். புகார்தாரர் பாலசுப்பிரமணியன் என்பவரை தெரியும்.குரோம்பேட்டையில் அவர் வசித்து வந்தார். சம்பவம் நடந்த இடத்தில் பொதுமக்கள் கும்பலாக நின்றிருந்தபோது நான் அங்கு சென்று பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி முறையிடப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 14.07.2024 ஆம் தேதி காலை சுமார் 3 மணியளவில் நானும் வெங்கடேசனும் டீக்கடைக்கு வந்து கடைக்காரரிடம் டீ கேட்டபோது அவர் டீ போட்டு கொண்டிருந்தபோது அதே பகுதியை சேர்ந்த ரமேஷ், கிஷோரும் டீ கேட்டதாகவும் அவர்களுக்கு சேர்த்து கடைக்காரர் டீ போட்டு கொண்டிருந்தபோது ஆஜரில் உள்ள ரமேஷ், கிஷோர் என்ற இரண்டு எதிரிகளும், புகார்தாரர் பாலசுப்பிரமணியத்தை அசிங்கமாக பேசி கையில் இருந்த கத்தியை காட்டி செல்ல விடாமல் கல்லாவில் இருந்த ரூ. 400 பணத்தை எடுத்து சென்றதாகவும், மேலும் புகார்தாரரை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாக கூறிவிட்டு ஆனால் தற்போது எதிரிகளுடன் ஒரே பகுதியில் வசித்து வருவதாலும் எதிரிகளை காப்பாற்ற வேண்டி நடந்த விவரங்களை பற்றி தெரியாது என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 42/2025 |
| Prosecution: | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சுரேஷ் |
| **Father Name** | ~ | ராஜன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 04.02.2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது. கடந்த 14.07.2024 ஆம் தேதி பகல் சுமார் 12 மணிக்கு எனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது குரோம்பேட்டை டிபி மருத்துவமனைக்கு அருகே போலீசாரும் பொதுமக்களும் கும்பலாக நின்றுகொண்டிருக்கவே நான் சென்று என்ன என்று பார்த்தபோது ஆஜர் உள்ள எதிரிகள் மற்றொரு நபருடன் சண்டை போட்டதாக கூறினார்கள். அதற்காக என்னிடம் சாட்சியாக இருக்குமாறு கேட்டுகொண்டதன்பேரில் சாட்சியாக இருந்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும்

கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆகவும், கைப்பற்றுதல் மகசரிலுள்ள . முதல் கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரணை செய்த தேதி நேரம் ஞாபகம் உள்ளதா என்றால் 14.04.2024 மதியம் 12 மணியளவில். எந்த இடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் டீபி மருத்துவமனை அருகே விசாரணை செய்தார்கள். இவ்வழக்கு சண்டையை நேரில் பார்த்தீரா என்றால் இல்லை. எதற்காக என்னிடம் போலீசார் கையொப்பம் பெற்றார்கள் என சொன்னார்களா என்றால் சண்டை போட்டுகொண்டது தொடர்பாக கையொப்பம் போட சொன்னார்கள். எனது முன்னிலையில் பொருட்கள் ஏதேனும் கைப்பற்றினாரா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்று தெரியும் வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.